HMOP .No. 29/2020 நாள் : 11.02.2026

<u>PW1 – பிரியா</u>

<u>குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது ஆர்.குமரசாமி, மேலக்காடு, கோவில்பத்து, வேதாரண்யம் என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழக்கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரர் தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் குடும்ப நல வழக்கு எண்.612/2019 என்ற வழக்கினை எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். நான் செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் GWOP.187/2024 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்குஇரண்டு குழந்தைகள் உள்ளார்கள் . அவர்கள் சாய் கௌரவ் மற்றும் சாய் பிரணவ் ஆவார்கள். சாய் கௌரவ் மற்றும் சாய் பிரணவ் தற்போது எங்கு படிக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது இரு குழந்தைகளும், எதிர்மனுதாரரும் எங்கு குடியிருந்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் அதனை தெரிந்து கொள்ள முயற்சி எடுத்தேனா என்றால் வீட்டிற்கு போனேன், அங்கு பூட்டியிருந்ததால் எதிர்மனுதாரர் வேலை செய்யும் அலுவலகத்திற்கு சென்றேன். குடும்ப நல வழக்கு எண்.612/2019 என்ற வழக்கில் என்னை குறுக்கு விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். நான் எனது மனுவிலும், எதிருரையில் திருமணத்தின்போது எனது தகப்பனார் 10 பவுன் நகைகளும், பீரோ, கட்டில் போன்ற சீர்வரிசை பொருட்கள் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு கொடுத்த 10 பவுன் நகை மற்றும் சீர்வரிசை பொருட்கள் தற்போது என்வசம் உள்ளது என்றால் சரிதான். நான் பி.ஏ.பி.எட்., படித்துள்ளேன். என் உடன்பிறந்தவர் ஒரு சகோதரியாவார். எனது தந்தை விவசாய தொழில் செய்துவந்தார். விவசாய தொழிலில் எனது தந்தைக்கு மாதம் ரூ.20,000/–ம் வருமானம் கிடைக்கும். எனது திருமணத்தின்போது சேமிப்புத்தொகையிலிருந்து பணம் எடுத்துதான் எனக்கு திருமண செலவு செய்தார். அந்த வங்கி கணக்கு புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும்.

நான் வழக்கில் எதிர்மனுதாரருக்கு ஏற்கனவே திருமணம் நடைபெற்றிருந்தது என்ற விவரம் 2015ல் தெரிய வந்தது. எதிர்மனுதாரருக்கு யாருடன் திருமணம் நடந்தது என்றும், அவர்கள் உயிருடன் உள்ளார்களா என்ற விவரம் தெரியாது. அவர்களது பெயர்கள் சிவசங்கரி, அமுதா, உஷாராணி ஆவார்கள். அவ்வாறு திருமணம் நடந்ததற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வாய்மொழியாக சொல்லும் குற்றச்சாட்டுகள்தான். எனது இரண்டு குழந்தைகளும் எதிர்மனுதாரரின் பராமரிப்பில் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். இரு குழந்தைகளும் நான் அழைத்தபோது என்னுடன் வருவதற்கு தயாராக இருந்தார்களா என்றால் அவர்கள் தயாராக இருந்தார்கள், எதிர்மனுதாரர் விடவில்லை. நானும். எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்த மேற்கு தாம்பரத்தில் அமைந்துள்ள சாரங்கா அவின்யூவில் சென்று அழைத்தேன். எதிர்மனுதாரர் குழந்தைகளை என்னுடன் அனுப்பவில்லை. இதுகுறித்து நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் குடும்ப நல வழக்கு எண்.612/2019 என்ற வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ளார். எந்த தேதியில் நான் மேற்கு தாம்பரத்தை விட்டு நாகப்பட்டினத்திற்கு வந்தேன் என்றால் 2019ம் ஆண்டு டிசம்பரில் இருக்கும். 2019 ஜீலை மாதம் எதிர்மனுதாரர் விவாகரத்து கோரி தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் தேதி எனக்கு சரியாக ஞாபகமில்லை. தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் விவாகரத்து கோரி தாக்கல் செய்த வழக்கிற்கு பின்னிட்டு எத்தனை வருடம் கழித்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒருவருடம் கழித்து தாக்கல் செய்துள்ளேன். எத்தனை வருடம் கழித்து செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் GWOP.187/2024 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் நான்கு வருடங்கள் கழித்து தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே எதிர்மனுதாரர் மேற்கு தாம்பரம் காவல் நிலையத்தில் எனது இருகுழந்தைகளையும் கடத்தி சென்றதாக ஒரு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் காவல் துறையில் புகார் கொடுக்கவில்லை.

நான் குழந்தையை தூக்கும்போது காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். நான் எந்த இடத்தில் வைத்து குழந்தைகளை தூக்குவதற்கு முயற்சி செய்தேன் என்றால் வினாயகர் கோவில் தெருவில் வைத்து தூக்குவதற்கு முயற்சி செய்தேன். அப்போது குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்வதற்கு தயாராக இருந்தபோது பள்ளி பேருந்து நிறுத்தம் அருகே தூக்குவதற்கு முயற்சி செய்தேன். அப்போதும் குழந்தைகள் என்னுடன் வரவில்லை என்றால் அவர்கள் வந்தார்கள், எதிர்மனுதாரர் விடவில்லை. நான் நாகப்பட்டினம் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை. வேதாரண்யம் காவல் நிலையத்தில் கொடுத்தேன். வேதாரண்யம் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள். அந்த புகாரின் மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் என்ன அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்கள் என்றால் கணவர் மற்றும் குழந்தைகளுடன் சேர்ந்து வாழசொல்லி அனுப்பி வைத்தார். அந்த அறிவுரையை ஏற்று நான் எதிர்மனுதாரருடன் சென்று குடும்பம் நடத்தினேனா என்றால் நான் சென்னைக்கு சென்றேன். எதிர்மனுதாரர் என்னைமட்டும் வீட்டில் விட்டு விட்டு குழந்தைகளை தூக்கிக்கொண்டு பக்கத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து வைத்துக்கொண்டு அங்கு சென்று விடுவார். நான் மட்டும் தனியாக ஒரு மாதம் அங்கு இருந்தேன். எதிர்மனுதாரரின் சொந்த வீட்டில் நான் தனியாக இருந்தேன். எதிர்மனுதாரர் வாடகை வீட்டில் இருந்தார். அவரது தாயார் எங்கு இருந்தார் என்று எனக்கு தெரியாது. எதிர்மனுதாரரின் தாயாருக்கு அந்த காலக்கட்டத்தில் சுமார் 80 வயதிருக்கும். அவரது தாயார் தற்போது உயிருடன் உள்ளாரா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். இந்த விவரத்தை எதிர்மனுதாரரின் பெரியம்மா தெரிவித்தார். இந்த விவரம் கேள்விப்பட்டு நான் துக்கம் விசாரிக்க முயற்சி செய்தேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் என்னை பல்வேறு கொடுமைகள் செய்ததாக மனுவில் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. கொடுமை செய்தார். அதுகுறித்து புகார் எதுவும் நான் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரர் என்னை கொடுமைப்படுத்தியதாக சட்ட அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.

எனக்கு எதிர்மனுதாரர் விவாகரத்து கோரி 2019ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பியிருந்தார். அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன். அந்த அறிவிப்பை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. அந்த வழக்கறிஞர் அறிவிப்பை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தால் உண்மை நிலவரம் தெரிந்து விடும் என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கு அறிவிப்பிற்கு நான் விவாகரத்து கொடுக்க முடியாது என்றும், சேர்ந்து வாழவேண்டும் என்று கோரி பதில் அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது விவாகரத்து மனுவில் தீர்ப்பாவதற்கு முன் எதிர்மனுதாரரிடம் நஷ்டஈடு எதுவும் கோரினேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் என்னிடம் அன்பாகவும், நல்லவிதமாகவும் குடும்பம் நடத்தி வந்தார் என்றால் இல்லை. எதிர்மனுதாரர் என்னிடம் அன்பாக இருந்ததால்தான் எனக்கு பரிசாக கார் வாங்கி கொடுத்தார் என்றால் இல்லை. எதிர்மனுதாரர் எனது திருமண காலக்கட்டத்திற்கு பின் என் வீட்டிற்கான சகல வசதிகளையும் செய்து கொடுத்தாரா என்றால் இல்லை. திருமண காலத்திலிருந்து உடல்நிலை சரியில்லை என்று பல்வேறு மாத்திரைகளை நான் உட்கொண்டு வருகிறேன் என்றால் சரியல்ல. நான் மனநிலை பாதிக்கப்பட்டு எப்போதாவது மனநல மருத்துவரை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் வீட்டில் எதிர்மனுதாரருடன் இருந்தபோது மனநலம் பாதிக்கப்பட்டவராகவே இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. நாளது தேதி வரை தாம்பரம் சார்பு நீதிமன்ற உத்தரவின்படி எனக்கு மாதந்தோறும் ஜீவனாம்சம் கொடுத்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்றும், அதனால் பொய் சாட்சி அளித்து பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மீது எதிர்மனுதாரருக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்றால் சரிதான். எதிர்மனுதார் என்மீது சந்தேகப்படுகிறார் என்று என் மனுவில் குறிப்பிட்டப்பட்டிருந்தால் அவைகள் பொய்யானவை என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரருக்கு தெரியாமல் என் சொந்தஊருக்கு சென்று விடுவது வழக்கம் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரருக்கு எந்தவிதமான கெட்ட பழக்க வழக்கங்களும் கிடையாது என்றால் சரிதான். நான் இந்த வழக்கை வேண்டுமென்று பொய்யான காரணங்களை காட்டி தாக்கல் செய்துள்ளதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.